சரக ஆணை எண். 59/2015
ந.க.எண். 0797/109/அ3/2014

காவல்துறை துணைத்தலைவர் அலுவலகம்,
திண்டுக்கல் சரகம்,
திண்டுக்கல்.  நாள்: 16.04.2015.

## பணி வரன்முறை ஆணை

**பொருள்:** காவல் – திண்டுக்கல் சரகம் – பணியமைப்பு – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III ஆக தேர்வு செய்யப்பட்ட தேர்வாளர் திரு. சி. பாக்கியசாமி என்பவரை சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III பதவியில் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடுதல் – தொடர்பாக.

**பார்வை:**
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் குழும செயலரின் குறிப்பாணை ந.க.எண். 7027/பிஎஸ்டி-பி2/2010 நாள்: 16.11.2012
2. சென்னை மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் பணியாணை ந.க.எண்: 86343/இ2/5/2012 நாள்: 05.12.2012.
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைக் குழும செயலரின் குறிப்பாணை ந.க.எண். 7027/பிஎஸ்டி பி2/2010 நாள்: 16.07.2013.
4. காவல்துறை தலைமை இயக்குநர், சென்னை அவர்களின் குறிப்பாணை ந.க.எண். 212095/என்.ஜி.பி.II(2)/2012 நாள்: 16.08.2013.
5. திண்டுக்கல் சரக ஆணை எண். 193/2013, ந.க.எண்:4073/422/அ3/2013 நாள்: 18.09.2013.
6. அரசாணை எண்: 292 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள்: 02.04.1987 தலைமை அலுவலக மேல்வரைவு ந.க.எண்: 212095/என்.ஜி.பி.II(2)/2012 நாள்:23.03.2015.

<<<>>>

திண்டுக்கல் சரக அலுவலகத்தில் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III ஆகப் பணிபுரிந்து வரும் திரு. சி. பாக்கியசாமி என்பவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2012 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சுருக்கெழுத்துத் தட்டச்சர்களுக்கான தொகுதி IV போட்டித் தேர்வின் மூலம் நேரடியாக தேர்வு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழும செயலரின் குறிப்பாணை ந.க.எண்: 7027/பிஎஸ்டி-பி2/2010 நாள்: 16.11.2012ன் படி மருத்துவம் மற்றும் ஊரகப் பணிகள் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டும், சென்னை மருத்துவக் கல்வி இயக்குநர் அவர்களின் பணியாணை ந.க.எண்: 86343/இ2/5/2012 நாள்: 05.12.2012ன் படி இவர், சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III ஆக, அரசு திருவாரூர் மருத்துவக் கல்லூரியில் பணியமர்த்தப்பட்டு, அன்னார் 20.12.2012 மு.ப. முதல் பணிபுரிந்து வந்துள்ளார்.

2. இந்நிலையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைக் குழும செயலரின் குறிப்பாணை ந.க.எண்: 7027/பிஎஸ்டி-பி2/2010 நாள்: 16.07.2013ன் படி நடத்தப்பட்ட துறை ஒதுக்கீடு மறு கலந்தாய்வில் காவல் துறைக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

-2-

3. மேற்படி கலந்தாய்வின் அடிப்படையில், தலைமை அலுவலகக் குறிப்பாணை ந.க.எண்: ந.க.எண்:212095/என்.ஜி.பி.II(2)/2012 நாள்: 16.08.2013ன் படி, திண்டுக்கல் சரக அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்டு, இவர் அரசு திருவாரூர் மருத்துவக் கல்லூரியிலிருந்து, 17.09.2013 அன்று பி.ப. பணிவிடுவிக்கப்பட்டு, இவ்வலுவலகத்தில் 18.09.2013 மு.ப. முதல் பணிபுரிந்து வருகிறார்.

4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை, காவல் துறை தலைமை இயக்குநர், சென்னை அவர்களுக்கு முகவரியிட்டு அனுப்பிய கடிதம் எண்: 7027/பிஎஸ்டி-பி1/எஸ்டி-டிஒய்/2013 நாள்: 05.03.2015ல், அரசாணை எண்: 292 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை நாள்: 02.04.1987ன் படி, பல்வேறு துறை / அலகுகளுக்கு மறு ஒதுக்கீடு செய்யப்பட்ட சுருக்கெழுத்து தட்டச்சர்களுக்கான பணியினை அவர்கள் முதலில் பணியில் இணைந்த துறை / அலகில் பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யப்பட வேண்டும் என தலைமை அலுவலக மேல்வரைவு ந.க.எண்: 212095/என்.ஜி.பி.II(2)/2012 நாள்:23.03.2015ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. எனவே, அன்னார் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III பதவியில் அரசு திருவாரூர் மருத்துவக் கல்லூரியில் பணிக்கு அறிக்கை செய்த நாளான 20.12.2012 மு.ப. முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குப்பட்டு அன்னாரின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

இப்பணி வரன்முறை, இப்பணியமைப்பு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற கிளைகள் மற்றும் வேறு நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ள வழக்குகள் சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்ற கிளைகளில் நிலுவையில் உள்ள வழக்குகளின் இறுதி நீதிமன்ற தீர்ப்பிற்குட்பட்டது.

6. மேலும், இவர் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளான 20.12.2012 முதல், மூன்று ஆண்டு காலத்தில், இரண்டு ஆண்டு காலம் பணி முடிக்கவேண்டும் என்ற அடிப்படை விதியின் கீழ், தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார்.

**ஒம்/-ந.அறிவுசெல்வம்,**
**காவல்துறை துணைத்தலைவர்,**
**திண்டுக்கல் சரகம். திண்டுக்கல்.**

**பெறுநர்:**
திரு. சி. பாக்கியசாமி,
சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை III,
சரக அலுவலகம், திண்டுக்கல்.

**நகல்:** காவல்துறை தலைமை இயக்குநர், தமிழ்நாடு, சென்னை.
**நகல்:** காவல்துறை தலைவர், தென்மண்டலம், மதுரை.
**நகல்:** "பி1" உதவியாளர், சரக அலுவலகம், திண்டுக்கல்.
**நகல்:** "பி2" இளநிலை உதவியாளர், சரக அலுவலகம், திண்டுக்கல்.
**நகல்:** சரக ஆணைப் புத்தகம்.
**நகல்:** இருப்புக் கோப்புக்கு.

// உத்தரவுப்படி //

17/4/15

**நிர்வாக அலுவலர்,**
**காவல்துறை துணைத்தலைவர் அலுவலகம்,**
**திண்டுக்கல் சரகம். திண்டுக்கல்.**

16/04/2015